பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

09 08 2024 7 15

வெள்ளிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. வயநாடு நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட கேரள மாநிலத்துக்குத் தேவையான உதவியை மத்திய அரசு செய்து தரும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. எதிர்கால தேவைக்கேற்ப எத்தனால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.
3. மாலத்தீவடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
4. இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தை மக்கள் வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.
5. பங்ளாதேஷின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு ஒபைதுல் ஹசன் தமது பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

கேரள மாநிலம் வயநாட்டில் நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டப்பின் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களை பிரதமர் திரு நரேந்திரமோடி நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

**Meppadi** செயின்ட் ஜோசப் பள்ளி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள

பெற்றோரை இழந்த இரண்டு மாணவர்கள் உட்பட பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரையும் பிரதமர் சந்தித்து ஆறுதல் கூறினார்.

அங்குள்ள மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து அவர் ஆறுதல் தெரிவித்தார்.

முன்னதாக சூரல்மலை, முண்டகை பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் பார்வையிட்டார்.

அவருடன் கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனும் சென்றிருந்தார்.

அந்த பகுதிகளில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து அதிகாரிகள் பிரதமரிடம் விளக்கிக் கூறினர்.

50 நிமிடத்திற்கு மேல் சூரமலையைப் பார்வையிட்ட பிரதமர், ராணுவ அதிகாரிகள், சிறப்பு மீட்புப்படையினர், தேசிய பேரிடர் மீட்புப்படையினர் உள்ளிட்டோரையும் சந்தித்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரண பணிள் குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட சில பகுதிகளுக்கு தரை வழியாகவும், வாகனம் மூலமாகவும் சென்று திரு நரேநதிரமோடி பார்வையிட்டார்.

பிரதமருடன் மத்திய இணை அமைச்சர் திரு சுரேஷ் கோபியும் சென்றிருந்தார்.

பின்னர் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பிரதமர். கேரள மாநிலம் வயநாடு நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய அரசு உறுதுணையாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்த பாதிப்பு குறித்து கேளர அரசின் விரிவான அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் மாநிலத்துக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறினார்.

நிலச்சரிவு ஏற்பட்ட நாளிலிருந்து அனைத்து மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளையும் தாம் தொடர்ந்து கண்காணித்து வந்ததாகவும்,

பாதிப்பிலிருந்து மீள்வதற்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு செய்து வந்ததாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வயநாடு பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களை தாம் நேரில் சந்தித்தது குறித்து கூறிய பிரதமர், ஆயிரக்கணக்கான குடும்பங்களின் கனவுகள் இந்த நிலச்சரிவினால் சிதைந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எதிர்காலத்திற்கு தேவையான உதவிகள் செய்து தரப்படும் என்றும் திரு நரேந்திரமோடி கூறினார்.

**[]<<<>>>[]**

எதிர்காலத்தில் பல்வேறு வகைகளில் எத்தனால் பயன்பாட்டை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மதத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தேசிய சம்மேளன நிகழ்ச்சியல் பேசிய அவர், மக்காச்சோளம், அரிசி, அழுகிய பழங்கள், மூங்கில் ஆகியவற்றையும் கரும்பு சக்கையோடு பயன்படுத்தி எத்தனால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை காண வேண்டுமென்று கூறினார்.

வரும் ஆண்டுகளில் ஆயிரம் கோடி லிட்டர் எத்தனாலை பயன்படுத்த திட்டமிடப்பட்டிருப்பதாகவும், எனவே எத்தனால் உற்பத்தி ஒரு லாபகரமான தொழிலாகவே இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பெட்ரோலில் எத்தனாலை கூடுதலாக சேர்ப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த அவர்., 2030-ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலில் 20 சதவீதம் எத்தனால் சேர்க்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று குறிப்பிட்டார்.

உலகளாவிய உயிரி எரிபொருள் ஒத்துழைப்பை உருவாக்கும் முயற்சியை பிரதமர் திரு நரேந்திரமேடி மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்த அவர், எத்தனாலை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகளும் அதிக அளவில் இருக்கும் என்றும், இதனால் விவசாயிகள் அதிக அளவில் பயன்பெறுவர் என்றும் கூறினார்.

எதிர்கால ஏற்றுமதியையும் கருத்தில் கொண்டு எத்தனால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு அமித்ஷா வலியுறுத்தினார்.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி 109 நவீன பயிர் ரகங்களை நாளை புதுதில்லியில் வெளியிடுகிறார்.

பருவ நிலை மாற்றத்தை தாங்கும் வகையிலும் உயிரி தொழில்நுட்பத்தில் இந்த பயிர் ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளையும் சந்தித்து திரு நரேந்திரமோடி உரையாடவுள்ளார்.

உயர் ரக விளைச்சல் தரும் பயிர்களில் 27 தோட்டக்கலைப் பயிர்களும், 34 வயல் சாகுபடி பயிர்களும் அடங்கியுள்ளன.

சிறு தானிய வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி உள்ளிட்ட பயிர் ரகங்களும் இதில் அடங்கியுள்ளன.

பழங்கள், காய்கறிகள், வாசனைப் பயிர்கள், பூக்கள் மற்றும் மருத்துவ குணங்கள் நிறைந்த பயிர்களும் நாளை பிரதமர் வெளியிடுவார் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தை வெற்றிபெறச் செய்யுமாறு மக்களை மத்திய ஊரக வளர்ச்சித்துறை இணை அமைச்சர் டாக்டர் **Pemmasani** சந்திரசேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்ட அஞ்சலகத்தில் இல்லந்தோறும் தேசியக் கொடி இயக்கத்தையொட்டி மூவர்ண தேசியக் கொடியை அவர் ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், பொதுமக்கள் தங்களது வீடுகளில் தேசியக் கொடியை ஏற்றி அதனை சமூக வலைதளங்களில் பதிவிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

மாலத்தீவுடன் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள திரு ஜெய்சங்கர், அந்நாட்டு அதிபர் டாக்டர் முகமது **Muizzu** -வை சந்தித்த பின் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இரு நாட்டு மக்களுக்கும் பயன்தரத்தக்க வகையிலும், மண்டல ரீதியாகவும் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மாலத்தீவு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு முகமது மம்முனையும் திரு ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.,

பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் கடல்சார் பாதுகாப்புக்கு மேற்கொள்ள வேண்டிய கூட்டு முயற்சிகள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

அந்நாட்டின் பொருளாதார மற்றும் வர்த்தகத்துறை அமைச்சரையும் சந்தித்த திரு ஜெய்சங்கர், நிதித்துறை அமைச்சரைவும் சந்தித்து பேசினார்.

மாலத்தீவுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளையும் காணொலி வாயிலாக திரு ஜெய்சங்கர் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

பிரஸார் பாரதி-யின் தலைவர் திரு நவ்நீத்குமார் சேகல் இன்று மும்பை அகாஷவாணி நிலையத்தை பார்வையிட்டார்.

இரண்டு நாள் பயணமாக மும்பை வந்துள்ள அவர், ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷன் அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

மும்பை ஆகாஷவாணி நிலையத்தை பார்வையிட்ட அவர், நேயர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

நாட்டில் உள்ள தொலைதூர பகுதிகளுக்கும் ஆகாஷவாணி நிகழ்ச்சிகள் சென்றடைவதாகக் கூறிய அவர், நேயர்கள், இளைஞர்கள், விவசாயிகள் என பல்வேறு தரப்பினருக்கும் தனித்தனியாக நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப வேண்டுமென்று தெரிவித்தார்.

மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய நிகழ்ச்சிகள் தரப்பட வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தெற்கு கஷ்மீரின் அனந்தநாக் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

அகலான் என்ற சிறிய கிராமப்பகுதியில் பதுங்கி இருந்த தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே தற்போது துப்பாக்கி சண்டை நடைபெற்று வருவதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

பங்ளாதேஷின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு ஒபைதுல் ஹசன் தமது பதவியை ராஜிநாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

அந்நாட்டு அதிபரிடம் தமது ராஜிநாமா கடிதத்தை அளிக்க உள்ளதாக செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

அதற்கு முன்னதாக நீதிமன்றத்தில் சில நடைமுறைகளை தாம் முடிக்க வேண்டி உள்ளதாகவும் அவர் கூறினார்.

அந்நாட்டில் போராட்டம் நடத்தி வரும் மாணவர்கள் மேல்முறையீட்டுக்கான நீதிபதிகள் மற்றும் தலைமை நீதிபதி பதவி விலக வேண்டுமென்று வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் அனைவரும் இன்று நண்பகலுக்குள் ராஜிநாமா செய்ய வேண்டுமென்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்

**[]<<<>>>[]**

இஸ்ரேல் ராணுவம் நடத்திய வான்வெளி தாக்குதலில் 93 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

காஸாவில் உள்ள பள்ளி மற்றும் மசூதியில் பாதுகாப்புக்காக தங்கியிருந்த இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக காஸா பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

காஸாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த மசூதியில் தொழுகைக்காக வந்திருந்த மக்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே இந்த தாக்குதலை உறுதி செய்த இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் அமைப்பினர் இந்த மசூதியில் தங்கியிருந்து தாக்குதலுக்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய அணி இன்று புதுதில்லி திரும்பியது.

விமான நிலையத்தில் இந்திய அணியினருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று நடைபெற்ற மல்யுத்தப் போட்டியின் மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Ritika** காலிறுதிப் போட்டியில் தோல்வியடைந்தார்.

ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இதுவரை ஒரு வெள்ளி ஐந்து வெண்கலம் உள்ளிட்ட ஆறு பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் 69-வது இடத்தில் உள்ளது.

**[]<<<>>>[]**

ஜெர்மனியில் நடைபெறும் சேலஞ்சர் ஆடவர் இரட்டையர் பிரிவு டென்னிஸ் இறுதிப் போட்டியில் இன்று இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை, பிரான்ஸின் **Theo Arribage –** பிரேசிலின் **Orlando Luz** ம-இணையை எதிர்கொள்கிறது.